நிழல்

நவீன சினிமாவுக்கான களம்

ஜூலை—செப் 2024



விட்டல் ராவ்
ரதன்
ஜமாலன்
எஸ். ஆனந்த்
சுரேஷ்வரன்
நிலவழகன்
ஜி.ஏ. கௌதம்
எம்.டி.முத்துக்குமாரசாமி
ஜான்பாபுராஜ்

விலை ₹ 75



நெய்வேலி புத்தகத் திருவிழா மற்றும் குறும்படப் போட்டி

77 வது கான் திரைப்பட விழா

ஊழி / ரஞ்ஞிற் யோசப்புடனான உரையாடல்

நீர் மேல் நெருப்பு உலக அரங்கில் மலேசிய தமிழ் சினிமா

மலையாள கிளாஸிக் சினிமா

அதிகாரத்திற்கு எதிராக கேள்வி கேட்பதும், பொதுபுத்தியில் அன்பை போதிப்பதும் அஞ்சாமை மற்றும் ரயில்



● ஜி.ஏ. கௌதம்

பாரடைஸ்

தொலைந்து போன சொர்க்கம்



சிசிலா கினி கினி (1992) துவங்கி, புர ஹண்ட கலுவர (1997), அகச குசும் (2008), ஒப நதுவா ஒப எக்கா (2012), காடி (2019) போன்ற திரைப்படங்களின் மூலம் அறிப்பட்ட சிங்கள திரைப்பட இயக்குநர் பிரசன்ன விதானகே அவர்களின் முதல் இந்திய திரைப்படமாக வெளியாகியிருக்கிறது 'பாரடைஸ்'. இத்திரைப்படத்தை நியூட்டன் சினிமா நிறுவனம் தயாரித்து, இயக்குநர் மணிரத்னம் அவர்களின் 'மெட்ராஸ் டாக்கீஸ்' நிறுவனம் வழங்கியிருக்கிறது.

திருமண தம்பதிகளான கேசவ் (ரோஷன் மேத்யூ) மற்றும் அம்ரிதா (தர்ஷனா ராஜேந்திரன்) இருவரும் தங்கள் ஐந்தாவது ஆண்டு திருமண தினத்தை கொண்டாட இலங்கை வருகிறார்கள். அதே நேரத்தில், கேசவ் இயக்கவிருக்கும் திரைப்படம் ஒன்றை நெட்ஃப்ளிக்ஸ் நிறுவனம் தயாரிக்க ஒப்புக்கொள்வதாக தகவல் வருகிறது. கேசவின் மகிழ்ச்சி இரட்டிப்பாகிறது. இலங்கை இராவண தேசம் என்பது நாம் அறிந்ததே. அதன் படி இந்த தம்பதியினருக்கு ராமாயணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்களை சுற்றிக்காட்டுகிறார் வழிகாட்டியான ஆன்ட்ரூ (ஷ்யாம் ஃபெர்னாடோ). அவர் கூறும் ராமாயண கதைகளின் திரிக்கப்பட்ட வெவ்வேறு கதைகள் அம்ரிதாவை நகைப்புக்குள்ளாக்குகின்றன.

> ஒரு பெண் எப்போதும் தன் பாதுகாப்புக்கு ஒரு ஆணை சார்ந்து தான் இருக்க வேண்டுமா என்ன? அத்புத ராமாயணத்தில் சீதை ராவணனை கொன்றதாக குறிப்பிடப்படுகிறதே, அப்படியென்றால் நீங்கள் சொல்வதை எப்படி நம்புவது?

ஒரு நாள் நடு இரவில் கத்தி முனையில், அவர்கள் இருவரின் மடிக்கணினி, டேப்லெட் மற்றும் அலைபேசிகள் திருடப்படுகின்றன. தனது நெட்பிலிக்ஸ் படம் குறித்த மொத்த ஆவணங்களும் அந்த லாப்டாப்பில் மட்டுமே இருப்பதாக கூறும் கேசவ், "ஜன்னலை திறந்து வைத்திருந்தாயா" என கேட்கிறான். மறுக்கிறாள் அம்ரிதா. "பிறகு எப்படி வந்தார்கள்" என்று அவளை மெல்ல சந்தேகப்பட ஆரம்பிக்கிறான். அடுத்த நாள் இருவரும் காவல் நிலையம் செல்கிறார்கள். இலங்கையில் நாடு தழுவிய போராட்டம் தீவிரமாக வெடித்துக்கொண்டிருக்கும் வேளையில், "ஏற்கனவே எங்க நாட்ல ஆயிரத்தெட்டு பிரச்சனை. இதெல்லாம்



ஒரு பிரச்சனையா” என இடது கையால் கையாள்கிறார் சர்ஜெண்ட் பண்டாரா (மஹேந்திர பெரெரா). ஆனால், தமிழ் படங்களில் விவேக் எனக்கு ஐஜியை தெரியும் என சொல்வது போல, கேசவ் “கமிஷ்னர் கிட்ட பேசவா?” என்றதும் அதிகாரி பண்டாரா ‘என்ன சார் இதை முதல்லயே சொல்ல கூடாதா!’ என்று பல் இளித்தபடியே விசாரணையை துவக்குகிறார். பலியாடுகளாக மூன்று மலையக தமிழர்களை முன்னிருத்துகிறார்கள். திருட வந்தவர்கள் இருட்டில் முகத்தை மூடியிருந்ததால் இருவருக்கும் சரியாக அடையாளம் தெரியவில்லை. என்னால் முகத்தை பார்க்க முடியவில்லை என அம்ரிதா ஒப்புக்கொள்கிறாள். ஆனால், கேசவ் உறுதியாக தெரியாத பட்சத்திலும் ஒருவரை உத்தேசமாக சுட்டிக்காட்டுகிறான். இதன் மூலம் இருவருக்குள்ளும், வெளியேயும் துவங்கும் புதுப்புது பிரச்சனைகளை கதைகளாக விவரிக்கிறது ‘பாரடைஸ்’ திரைப்படம்.

இப்படத்தில் கதை நிகழும் காலகட்டம் மிக முக்கியமானது. அவர்கள் சென்ற 2022ஆம் ஆண்டு காலகட்டத்தில் இலங்கை சந்தித்த பொருளாதார சீர்குலைவு என்பது கிட்டத்தட்ட இன்னொரு போருக்கு சமமானது. எந்தளவுக்கு என்று சொன்னால், குற்றவாளிகளை விசாரணை செய்ய செல்வதற்கு காவல்துறையிடமே போதுமான பெட்ரோல் இல்லை என கை விரிக்கிறது. பெட்ரோலுக்காகவும், டீசலுக்காகவும் நீண்ட வரிசையில் காத்திருக்கும் வண்டிகள், சமைக்க எரிவாயு இல்லாமல் திண்டாடும் பாமர ஜனங்கள், தேர்வெழுத, பத்திரிக்கைகள் அச்சடிக்க காகிதம் இல்லாத நிலை என இலங்கை போர் நின்ற பின்னும் சாதாரண மக்கள் அனுபவிக்கும் துன்பங்களை சுமந்துகொண்டிருந்தது.

ராமாயணம் நிறைய இடங்களில் மறைமுகமாக இன்னொரு தளத்தில் கதையாக நகர்ந்து கொண்டிருக்கிறது. ராமாயணத்தில் சீதைக்கு மான்கள் மீதிருக்கும் விருப்பத்தை அம்ரிதாவின் கதாப்பாத்திரம் மூலம் மறைமுகமாக பிணைக்கிறது. தம்பதிகளுடன் வரும் மிஸ்டர். ஆண்ட்ரூ ஒரு குகையை காண்பித்து, இங்கு தான் இராவணன் சீதையை சிறை வைத்தான் என்றும், வேறு ஒரு இடத்தை காண்பித்து இங்கு வந்து தான் முதன் முதலில் வெளிச்சத்தை சீதை பார்த்தாள் என்றும், ராவணன் உறங்கிக்கொண்டிருக்கிறார். தேவைப்படும் சமயத்தில் எழுவார் என்றும் கதை கட்டுகிறார். இத்தனையும் கேட்ட அம்ரிதா “ஒரு பெண் எப்போதும் தன் பாதுகாப்புக்கு ஒரு ஆணை சார்ந்து தான் இருக்க வேண்டுமா என்ன? அத்புத ராமாயணத்தில் சீதை ராவணனை

கொன்றதாக குறிப்பிடப்படுகிறதே, அப்படியென்றால் நீங்கள் சொல்வதை எப்படி நம்புவது?" என கேட்கிறாள். இதற்கு பதில் சொல்ல முடியாமல் முகம் வெளிறி போகிறார் ஆண்ட்ரூ. வலிந்து திணிக்கப்படாத பெண்ணியம் இன்னொரு ஆறுதல்.

பின்னர் சிரித்துக்கொண்டே, "300 விதமான ராமாயணம் இங்கே இருக்கிறது. இதில் பலருக்கும் தெரியாத பல உட்கதைகளும் உண்டு. இதனால் கோவிலில் இருக்கும் சாமியார் உட்பட அவரவர் பிழைப்புக்கு ஏற்றபடி ராமாயணத்தை மாற்றிக்கொள்கிறார்கள். உங்கள் நாடு இப்போதிருக்கும் மோசமான நிலைக்கு ராவணன் அவசியம் எழுந்தே தீர வேண்டும்" என்று ஆண்ட்ரூவை ஆச்சரியமூட்டுகிறாள். மக்களின் அறியாமையில் அறுவடை செய்பவர்கள் இதனால் தான் படித்தவர்களை பார்த்தாலே தலை தெறிக்க ஓடுகிறார்கள். உண்மையில் அம்ரிதா மிகத்தெளிவான கதாப்பாத்திரம். இத்தனை தெளிவான ஒரு பெண்ணுக்கு விதி வேறு யாரோடு முடிச்சுப்போடும்? தன்னைப்பற்றி மட்டுமே சிந்திக்கும் ஒரு குழப்பான ஆணுடன் தான்.

வெளியில் பார்க்க இனிமையான காதல் ஜோடிகளாக தெரியும் இந்த தம்பதிகளுக்கிடையில், ஒரு பிரச்சனை உருவாகும் போது அவனது உண்மையான நிறம் மெல்ல அவளிடம் வெளிப்படுகிறது. அறம் சார்ந்த சிந்தனைகளில் இருவரின் கோட்பாடும் வேறு வேறாக இருக்கிறது. சுற்றுலா வந்திருந்தாலும் லேப்டாப், மொபைல் என எந்நேரமும் தனது சிந்தனையை இந்தியாவிலேயே வைத்திருக்கிறான் கேசவ்.



ஆனால் அதற்கு அப்படியே எதிராக சின்னச்சின்ன விஷயங்களைக்கூட அணு அணுவாய் ரசிக்கிறாள் அம்ரிதா. அவர்கள் கண்ணில் படும் மானைக்கூட சுட மனமில்லாமல் விட்டு விட சொல்கிறாள். ஒவ்வொரு முறையும் துப்பாக்கி சுடும் சத்தம் கேட்கும் போதெல்லாம் அவள் மனதில் உதிக்கும் ஒரே கேள்வி அந்த மான் உயிரோடு இருக்கிறதா இல்லையா என்பதே. மானுக்கே இப்படியென்றால், சக மனிதனுக்கென்றால் ஏற்றுக்கொள்வாளா என்ன!

தனக்கு தெரியவில்லை என்ற போது அதை அம்ரிதா வெளிப்படையாக ஒப்புக்கொண்டாலும், கேஷவ் ஒருவரை தவறாக சுட்டிக்காண்பித்ததில் அவளுக்கு உடன்பாடில்லை. ஆனால், அப்படியாவது தனது தொலைந்து போன பொருட்கள் கிடைக்கும் என நம்புகிறான் கேஷவ். மானை சுட வேண்டாம் என்று அம்ரிதா சொன்னதில் கேசவிற்கும் உடன்பாடில்லை. பிரச்சனை என்று வந்த பின்பு அதை எப்படி சரி செய்யலாம் என்பதை விட, நீ தான் காரணம் என இன்னொருவர் மீது பழி போடுவதில் குறியாக இருக்கிறான் கேஷவ். "இரவு நீ மட்டும் சரியாக ஜன்னலை மூடியிருந்தால் இந்தப்பிரச்சனை வந்திருக்காது" என சீதையை ராமன் சந்தேகப்பட்டது போல அம்ரிதா மீது சந்தேகப்படுகிறான் கேசவ்.

குற்றமென்று நடந்து விட்டால் அவர்களுக்கு தேவையான பலியாடுகளை மலைப்பகுதியில் வாழும் தமிழர்களிடத்தில் தேடுவதாக காண்பித்திருக்கிறார்கள். வழக்கை மூடுவதற்கு குற்றவாளி சிக்காவிட்டாலும் அதற்கு பதிலாக, ஒடுக்கப்பட்டவர்களை கைது செய்து அவர்களை ஒப்புக்கொள்ள வைத்து மிரட்டுவதில் தமிழகத்தை விட எந்தவகையிலும்



இலங்கை சளைத்ததில்லை என உணர்த்துகிறது. அந்த வகையில் கேசவ்வின் அதிகாரத்திற்கு இணைந்து, மூன்று மலையக தமிழர்களை எவ்வித ஆதாரமும் இன்றி காவல் துறையினர் தடியில் நடத்தும் தீவிர விசாரணையில், அடிபட்ட ஒருவனை மருத்துவமனை கொண்டு போக வண்டியில் பெட்ரோல் இல்லாமல் நடுரோட்டில் காத்திருக்கும் அவலம் காவல்துறைக்கு. இறுதியாக கேசவ், அம்ரிதாவின் வண்டியில் அழைத்துச்செல்ல வேண்டிய நிலை. காரில் மூச்சு வாங்கிக்கொண்டிருக்கும் குற்றவாளியின் நிலை அம்ரிதாவை மனதளவில் நிலைகுலைய செய்கிறது. ராமாயணத்தில் வருவது போலவே எது நடந்தாலும் அதற்கு குரல் கொடுக்க முடியாத சீதையாக அம்ரிதா கேசவ்வுடன் இருக்க வேண்டிய நிலை. சரியோ தவறோ கணவனின் முடிவுகளுக்கு துணை நிற்கிறாள். அடிபட்டவர் இறந்துவிட்ட செய்தி தெரிந்ததும் மலையகம் முழுவதும் கலவரமாகிறது. ஒரு வகையில் இதற்கு நாமும் தான் பொறுப்பு என்று அம்ரிதா சொல்கிறாள். அப்போதும் கூட அதை ஏற்றுக்கொள்ளாமல், “நாம் எப்படி பொறுப்பாக முடியும்? காவல் துறை அவர்களின் வேலையை செய்தார்கள். அதில் ஏதேனும் நடந்தால் அது அவர்கள் குற்றம் தானே!” என தன்னை தானே ஏமாற்றிக்கொள்ளும், தனது மனசாட்சியை அழித்துவிட்ட ஒரு கதாப்பாத்திரமாக கேஷவ் கொஞ்சம் கொஞ்சமாக அரக்கனாக மாறத்துவங்குகிறான். நீ எதை விதைக்கிறாயோ அதுவே விளையும் என்பது போல, இந்த குணமே கடைசியில் அவனுக்கு எமனாகவும் மாறி விடுகிறது.

தன்னைப்போலவே பிறரும் உணர்ச்சி வயப்பட வேண்டும் என நினைக்கும் கேசவ், “மடிக்கணிணி, அலைபேசி என உடமைகள் தொலைந்து போன பின்னும் எப்படி உன்னால் மகிழ்ச்சியாக இருக்க முடிகிறது” என புன்னகைத்தபடி சாப்பிடும் அம்ரிதாவிடம் கேட்கிறான். இத்தனை ஆண்டுகாலம் பார்க்காத புது பரிமாணத்தில் கேசவ்வை பார்ப்பதில் ஒரு பக்கம் ஆச்சரியமும் இன்னொரு பக்கம் வருத்தமும் கலந்த முகத்துடன் அமைதியாகிறாள் அம்ரிதா. குறைவாக பேசினாலும் மகிழ்ச்சி, பயம், சந்தேகம், வேதனை என அதிகம் கண்களால் உணர்சிகளை வெளிப்படுத்துகிற அம்ரிதாவாக தர்ஷணா ராஜேந்திரன். அதே சமயம், அதிகாரம் இருக்கும் தைரியத்தில் தன் விருப்பத்திற்கு அம்ரிதாவை கைப்பாவை போல நகர்த்துகிற கேசவாக ரோஷன் ஆண்ட்ரூஸ் சுயநலமும், பாதுபாக்கப்பற்ற மனநிலையும் கொண்ட ஒருவனை கண்முன் நிறுத்துகிறார். துவக்கத்தில் இவனெல்லாம் ஒரு ஆளா என நினைத்து கையாண்டு, பின்னர் அரசியல் பின்புலம் உள்ளவர் என்பது தெரிந்த பின்னர் பல் இளித்தவாறே கேசவ் செல்வதெற்கெல்லாம் அடி பணியும் சர்ஜண்ட். பண்டாரவாக மகேந்திர பெரெரா ஒரு ஊழல் நிறைந்த காவலதிகாரியை பிரதிபலிக்கிறார். அமைதியாக இருந்தாலும் சூழலை புரிந்துகொண்டு அதற்கேற்றவாறு நடந்துகொள்கிறது மிஸ்டர். ஆண்ட்ரூ என இருவராலும் அழைக்கப்படும் ஷ்யாம்

ஃபெர்னாடோவின் கதாப்பாத்திரம்.

தத்துவம் மற்றும் உளவியல் இரண்டும் கலந்த கதைகளை கையாள்வதில் தேர்ந்த இயக்குனர் பிரச்சன விதானகே அவர்களுக்கு இத்திரைப்படம் மேலும் ஒரு பதக்கம். நெருக்கடியை எதிர்கொள்ளும் போது மனிதனின் பலவீனத்தை சிறந்த முறையில் வெளிப்படுத்துகிறது இவரது இயக்கம். கொஞ்சம் கொஞ்சமாக ராமனை ராவணனாக நம் கண் முன்பாகவே நமக்கு தெரியாமல் மாற்றுகிறார். கடைசியில் அரக்கனாக மாறும் முகத்தை பார்க்கையில், அதை ஏற்றுக்கொள்ளாமலும் இருக்க முடியாத வண்ணம் உளவியல் ரீதியில் சமன் செய்கிறார்.

இப்படத்தின் இன்னோர் பன்முகத்தன்மை அதன் மொழி. இப்படியாக பல்வேறு படிநிலைகளில் உள்ள மனிதர்களுக்கேற்ற வகையில் மொழியை நிர்ணயித்த விதம் புதுமை. உண்மையில் இந்தப்படம் எந்த மொழித்திரைப்படம் என்று எடுத்துக்கொள்ள முடியவில்லை. அந்தளவு கலவையான பல்வேறு மொழிகள். கேசவ் மற்றும் அம்ரிதா ஒருவருக்கொருவர் மலையாளம் மற்றும் ஆங்கிலம் பேசுகிறார்கள். கேசவ் தனது நண்பர்களுடன் தொலைபேசியில் இந்தியில் பேசுகிறான். அம்ரிதா உள்ளூர் குழந்தைகளுடன் தமிழில் பேசுகிறாள். தம்பதிகள் இருவரும் சுற்றுலா வழிகாட்டியான ஆண்ட்ரூவுடன் ஆங்கிலத்தில் பேசுகிறார்கள். ஆண்ட்ரூ தனது விடுதி ஆட்களுடனும், காவல்துறை அதிகாரிகளுடனும் சிங்களத்தில் பேசுகிறார்.

இப்படத்தை பார்த்த பின்பு நிச்சயம் ஒரு முறை இலங்கை சென்று படத்தில் வரும் இடங்களை பார்க்க வேண்டும் என்று தோன்றும் அந்தளவுக்கு இலங்கையின் வனப்பகுதி அழகிய காட்சிகளாக விரிகிறது. அதே சமயம் பெரும்பாலான காட்சிகளில் வண்டிக்குள் இருந்து செல்பவரிகளின் பார்வையில் (POV) காண்பித்து கதையை தாண்டி செல்லாமல் படத்தோடு ஒன்றிப்போகிறது ராஜீவ் ரவியின் ஒளிப்பதிவு.

காவல் நிலையத்தை ஒரு பெரும் கூட்டம் சூழ்ந்திருப்பதை, சப்தங்களின் மூலம் சாத்தியப்படுத்தியிருக்கிறார் ஒலிவடிவமைப்பு செய்த தபஸ் நாயக். போதுமான இடத்தில் இசையை பயன்படுத்தியிருக்கிறார் இசையமைப்பாளர் கே. எந்த ஒரு குறிப்பிட்ட காட்சியுடனும் அதிக நேரம் தங்காமல் முடிந்த வரை அடுத்த காட்சிக்கான நகர்த்துதலில் காட்சியின் வேகத்தை அதன் போக்கில் போக விட்டு வேகத்தையும், காட்சிகளின் ரிதத்தையும் ஸ்ரீகர்பிரசாத்தின் படத்தொகுப்பு சமன் செய்கிறது.

மானை ஒரு உவமையாக வைத்து நகர்த்தும் அனுஷ்கா செனநாயகேவின் திரைக்கதையின் துவக்கத்தில் காண்பிக்கப்படும் ஆயுதமானது எதேனும் ஒரு வழியில் பயன்பட்டே தீரும் என்பது காட்சிகளை நகர்த்துதலின் விதி. அப்படியாக படத்தின் துவக்கத்திலேயே வேட்டையாட பயன்படுத்தப்படும் துப்பாக்கியை மிகுந்த கனத்துடன் அம்ரிதா தூக்கிப்பார்க்கும் போதே, இந்த துப்பாக்கி பின்னால் ஏதோ முக்கியமான இடத்தில் பயன்படப்போகிறது என புரிந்துவிட்டது. அது சரியாக பயன்படுத்தப்படும் காட்சிக்காகத்தான் காத்திருந்தேன். ஆனால், நிகழ்ந்தது பார்வையாளர்கள் யாரும் எதிர்பாராத ஒன்று.

இத்திரைப்படம் தென் கொரியாவின் பூசான் சர்வதேச திரைப்பட விழா, நியூயார்க் சர்வதேச திரைப்பட விழா, சிட்னி திரைப்பட விழா, மும்பை திரைப்பட விழா என பலதரப்பட்ட திரைப்பட விழாக்களில் பரவலான கவனத்தைப் பெற்றது. ஆசிய திரைப்பட விருதுகளில் சிறந்த திரைப்படம், சிறந்த இயக்குனர், சிறந்த திரைக்கதை மற்றும் சிறந்த படத்தொகுப்பு என நான்கு பிரிவுகளில் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

(ஸ்பாயிலர் அலர்ட்)

ராமாயணம், மகாபாரதம் போன்ற கதைகள் பெரும்பாலும் ஆண்கள் தங்கள் அதிகாரத்தை நிலைநிறுத்தவும், தங்கள் நிலம், செல்வம், மக்கள் (குறிப்பாக பெண்கள்) போன்றவற்றிற்காக தொடரும் போர்களாகவுமே இருந்திருக்கின்றன. அந்த வகையில் கேசவ் எனும் ராமன் இழந்த உடைமைகளை மீண்டும் பெறுவதற்காக ராவணன் எனும் அரக்கனாக மாறும் சூழலில் தான் தன் மனைவியால் (சீதை) சுடப்படுகிறான். அமிர்தா முன்பு சொன்ன ராமாயணத்தைப்போலவே நிகழ்காலத்தில் மீண்டும் நடக்கிறது.

அம்ரிதா ஏன் சுட்டாள் என்பதற்கு கலவையான விமர்சனங்கள் பார்வையாளர்களிடையே பார்க்க முடிந்தது. துப்பாக்கி கையிலிருந்த பதட்டத்தில் என்ன செய்வதென்று தெரியாமல் சுட்டிருக்கலாம் எனவும், வேறு யாரையொ சுட நினைத்து தவறாக சுட்டிருக்கலாம் எனவும், சுடாமல் விட்டால் இன்னும் பல பேரை கொன்று விடுவான் என்று பயந்து சுட்டுவிட்டாள் என்றும் பல்வேறு விதமான கதைகள் ராமாயண கதைகளை சொல்வது போல பார்வையாளர்களால் யூகிக்கப்படுகிறது. இதற்கான விடையை இயக்குநரிடம் கேட்கையில் புன்னகை மட்டுமே பதிலாக கிடைத்தது. இதுவும் ஒருவகையில் ராமாயணத்தின் ஒரு சமகால அத்தியாயம் ●